**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII–Code of Criminal Procedure)**

**PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS COURT, PALANI.**

**Sessions Case No.** 57/2022

**Prosecution** – PW9/LW10

**Deposition of witness for : Defence**

**Court**

**Name** : **திருமதி.பாப்பாத்தி**

**Husband 's Name** : **திரு. நாகராஜ்**

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 22-04-2025

எதிரிகள் ஆஜர்

<u>முதல் விசாரணை:</u>

நான் தாடகையம்மன் கோவில் , சின்னையா தெருவில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எங்கள் ஊரை சார்ந்த காயம்பட்ட பரமசிவத்தை எனக்கு தெரியும். சுமார் 10 ஆண்டுக்கு முன்பு மாரியம்மன் கோவில் நோன்பின்போது பரமசிவத்தை குத்தி காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக மறுநாள் காலையில் தகவல் அறிந்தேன். அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>அரசு தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154-இன் கீழ் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.</u>

கடந்த 07.03.2012ம் தேதி இரவு 11.30 மணிக்கு எங்கள் தெரு சார்பாக வண்டி காளியம்மன் கோவில் ரத ஊர்வலம் நடைபெற்ற போது நாங்கள் கலந்து கொண்டோம்

என்றும், அதில் பரமசிவத்திற்கும், சலீம் ராஜாவிற்கும் தகராறு ஏற்பட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அங்கிருந்து சென்ற சலிம் ராஜா மற்றும் மற்ற எதிரிகள் திரும்பவும் வந்து பரமசிவத்தை கத்தியால் வயிற்றின் வலப்பக்கத்தில் குத்தி விட்டார்கள் என்றும், அதை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதன்பின்னர் அந்த எதிரிகள் அங்கிருந்து ஓடி விட்டார்கள் என்றும், பரமசிவத்தை போக்குவண்டியில் ஏற்றி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், அதன்பின்னர் தனியார் மருத்துவமனையில் அழைத்து சென்றார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.